முன்னுரை

அகிலம் அனைத்தையும் ஆக்கி யமைத் தழிக்கும் அண்ணலையும் அடையப்பெறுவோம், அவனால் ஆக்கப்பெற்ற உலகனைத்தையும் எங்கள் ஆதிக்கத்தில் அடக்கி ஆளப்பெறுவோம், இயற்கையின் திறனனைத்தையும் அடக்கி ஒடுக்கி மடக்கி எங்கள் மனம் விரும்புமாறு பயன்படுத்திக்கொள்வோம், அண்டகோளத்தின் முகடுவரைச் சென்று ஆங்குள கோளங்களனைத்தையும் ஆட்டிப்படைப்போம் எனத் திடங்கொண்டு; ஆதி மனிதன் காணுங்கால கல்லாய்ச் சமையும் பற்பல இயந்திரச் சாதனங்களைத் தோற்றுவித்து உலகில் மிகப்பெரும் வியக்கத்தக்கக் காரியங்களைப் புரிந்துவரும் விஞ்ஞான யுகமாம் தற்காலத்தில், மற்ற எத்துறையினும் மக்கள் முன்னேற்ற மடைந்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டாலும் இவைகளனைத்திற்கும் நேர்மாறாக வாழ்ந்த ஆதிகால மனிதர்களுடனே ஒப்பிட்டு நோக்குங்கால் தற்கால முன்னேற்றத்தை முன்னேற்றமென்றுக் கூறாது பின்னிறக்கமென்றே கூறலாம்.

ஆதிகால மக்கள் உடலில் உரம் பெற்றிருந்தனர். மனதின் மாண்புற்றிருந்தனர், ஆயுளில் ஆயிரம் பெற்றனர். ஒழுக்கிற் விழுப்பம் பெற்றனர். மற்ற மக்கட்பாற் மதிப்புக்கொண்டனர், வியக்கும் செய்கைகள் வீறுகொண்டாற்றினர், ஈவிரக்கத்தில் மீமிக்கிருந்தனர், அமைதியைக் கண்டனர், அடைக்கலம் விண்டனர். தீமைக்கு அஞ்சினர் நன்மைக்கு மிஞ்சினர். பெண்கள்பால் பெருமிதம் கொண்டனர், மக்கட்பால் மாட்சிமை கண்டனர், இரந்தார்க் கீந்தனர் இறைவனை இறைஞ்சினர். ஆனால் கலைகளில், நாகரீகத்தில், கல்வியில், ஒழுக்கத்தில் மிக்கதாய்க் கூறப்படும் தற்கால மக்களிடைக் காண்பதென்ன? உடல்வலிமை உப்புக்கரை, நீண்ட ஆயுள்

காண்டவில்லை, இயந்திரம் பெருத்தன தந்திரம் வலுத்தன, மக்களுக்கு மாக்களின் மதிப்பு, கொலைத்தொழில் கலைத்திறமை, பொய்யே புண்ணியம், பசியான் மடிவோர் பத்துநூறாயிரம், ஆடையின்றி மக்கள் அலைந்துதிரிய ஆண்டவன் கோலம் அளவிடற்பால, மருந்துகள் மலிந்தன விருந்துகள் குலைந்தன.

முன்னேற்றத்தின் பெயரால் உலக மக்கள் தவிக்குந் தவிப்பை, விஞ்ஞான முதிர்ச்சியினால் தோன்றிய சாதனங்களால் மக்கட்குழுவினர் பரிதாபமாய் கொலை செய்யப்படும் கொடுமையை, கல்வி வளர்ச்சியின் பெயரால் மக்கள் இறைவனுக் கஞ்சாது ஈனக் கொடும்பாதகங்களைப் புரியத் துணிந்த நிலையினைக் கண்ணுற்று உலக அறிஞர்கள் அனைவரும் உலகை இந் நாகரீகமெனும் கொடிய பேயின் வாயிலேயிருந்து மீட்டு அமைதியை நிலைநாட்ட பலவாற்றான் வழிதேடி வருகின்றனர். பல வகைகளானும், பல நிலைகளானும், பல துறைகளினின்றும் துருவித்துருவி ஆய்ந்த இன்னோர்கள் "மக்கட் சமூகம் மறுபடியும் தன் பழங்கால ஒழுக்க நிலைக்குத் திரும்பினாலன்றி இக் கொடும் பேயின் வாயினின்றும் விடுதலை பெற இயலாது" என்ற முடிவிற்கு வந்துள்ளனர். ஆகவே பழங்கால மக்களின் வாழ்க்கை நிலைகளை செவ்வனே அறிந்துகொள்வான் வேண்டி பலவகையானும் முயற்சித்து வருகின்றனர்.

மிகப்பழங்காலத்திய சமூகங்களுள் திராவிடப் பெருமக்களின் சமூகமும் தலைசிறந்ததொன்றாய் இருந்தது என்ற உண்மையை அவர்கள் கண்டுள்ளனர். ஆகவே தற்கால மனித சமூகத்தைப் பண்படுத்தும் நற்பெறும் காரியத்தில் திராவிடச் சமூகமும் தன் பங்கையளித்துப் பெருமைகொள்ள இடமுண்டு. அப்பெரும் பணியைத், தன் பழங்காலச் சிறந்த கலை, நாகரீகங்களை இன்றளவும் உலகிற்கெடுத்தோத சிறந்து விளங்கியிருக்கும் **தொல்காப்பியம்** என்ற தனித்தமிழ் பழம்நூலைக்கொண்டே ஆற்றவேண்டி யிருக்கிறது. இதில்தான் தமிழ்ப் பெருமக்கள் சீருஞ் சிறப்பும் பெற்று வாழ்ந்தகாலத்திய ஒழுக்கவிதிகள் பொதிந்துகிடக்கின்றன. ஆகவே இதன்வாயிலாக அவ்வறிஞர்களுக்கு உலகை இனி யவர்கள் மாற்றியமைக்கவேண்டிய நிலையைக் குறித்து அறிவுறுத்த விரும்புகிறோம்.

இப்பேரறிஞர்களின் நற்பெரும் முயற்சிகளுக்கு மாறுபாடாக, எந்தச் சமூகத்தாரின் ஒழுக்க முறைகளுக்கு உலகை மாற்ற அறிஞர்கள் முற்பட கடமைப்பட்டுள்ளனரோ அம்மாபெரும் திராவிடச் சமூகத்தாரில் சிலர் தங்கள் பழங்கால முன்னோர்களுக்கு எதிரிடையாய், தங்கள் பழம் நூல்களுக்கு மாறுபாடாய் தற்காலம் யாராலும் வேண்டப்படாத "ஆரிய திராவிட" பிரிவைக் கற்பித்து அறிஞர்களின் நன்முயற்சிகளையும், உலகின் நன்மையையும் சிதைக்க முற்பட்டுள்ளமையான் முதன்முதலில் அன்னார்களின் பொய்க்கூற்றுகளை அடக்கக் கடமைப்பட்டுள்ளோம் என்று நம்புகிறோம். இன்றேல் தொல்காப்பியத் தனிச்சிறப்பை உலகினற்கெடுத்தோத இயலாது. எனவே யாம் முதலில் அறிஞர்களின் பணியிலே பங்கெடுத்துக்கொள்வதை விடுத்து இப் பொய்க்கூற்றாளர்களுக்கு விடைகூறுவான்புக நேர்ந்தது.

முதல் மனிதன் உலகில் தோன்றிய நாள்முதற்கொண்டு இந்நாள்வரை தோன்றிய சமுகங்க ளனைத்திலும் அறிஞர்கள் பலர் மக்களின் மேம்பாடுகளுக்கான முறைகளை வகுக்க பெரும் பாடுபட்டுள்ளனர். அவர்கள் அனைவரின் முடிபுகள் அனைத்தும் ஒன்றாகவே யிருப்பதை ஆராய்ச்சியாளன் எவனும் எளிதில் அறிந்துகொள்ளலாம். அம்முடிபுகளின் உண்மைகளைக் கைக்கொண்டு ஒழுகும் மக்கள் அவர்களின் இடம், காலம், நிலைகளுக்குத்தக வேறுவேறு வழிகளில் உபயோகிக்கலாகின்றனர். ஆகவேதான் மேல்நோக்காகக் காண்பவர்களுக்கு அவைகள் வெவ்வேறான உண்மைகளாய்த் தோன்றுகின்றன. எனவே "எங்கள் திராவிட சமுகத்தார்கள் கண்ட உண்மைகளும், கொண்ட வொழுக்கங்களும் ஆரிய சமுகத்தார்களின் உண்மைகளுக்கும், ஒழுக்கங்களுக்கும் வேறுபட்டவை" என்று திராவிடப் பெருமக்களுள் சிலர் கூறுவதைக்கேட்டு யாம் ஆராயப்புகுந்தகாலை அவர்கள் கூற்றுக்கு மாறாக இரு சமுகத்தார்களின் உண்மைகளும், ஒழுக்கங்களும பெரும்பாலும் ஒத்திருப்பவையாகக் கண்டோம். எனவே இவ்வுண்மையைப் பொதுவாக உலகினர்க்கும், குறிப்பாகத் தமிழர்களுக்கும் உணர்த்துவான்வேண்டி இதற்குமுன் யாம் "திருவள்ளுவர் ஆரி

யர்" என்ற சிறு நூலை வரைந்தோம். அதைத் தொடர்ந்து தற்போது "தொல்காப்பியம் ஆரிய தர்ம நூல்" என்ற இச்சிறு நூலை வெளியிடுகிறோம். மேலும் பழந் தமிழ் நூல்களில் பொதிந்து கிடக்கும் தனித்தமிழர்களின் ஒழுக்கங்கள், ஆரியர்களின் ஒழுக்கங்களைச் சார்ந்தனவே என்பதை விளக்கிப் பல சிறு நூல்கள் வெளியிடப்பெறும்

இத்துறையில் யாம் இறங்கியதின் நோக்கம் தமிழர்கள் புத்துயிர்பெற்றுச் செழித்துத் தளிரவும், தீஞ்சுவைச் செந்தமிழ் மொழி மறுபடியும் உலகினர் அனைவர்க்கும் தன் சுவையால் விருந்தாற்றவும் இடையூராயிருக்கும் இந்தியாவின் அடுமைத் தளையை தகர்த்தெரியும் பெருநன்முயற்சிக்குத் தறுக்கீடாய் கூப்பாடிடும் எம் சில தமிழ் உடன்பிறந்தார்களுக்கு உண்மையை உணர்த்தி அவர்களை, அவர்களின் தவறான நெறியிலே யிருந்து திருப்பி அந்நன் முயர்ச்சியிலே பங்காளிகளாக ஆக்கித் தமிழுக்கும், தமிழர்களுக்கும் தொண்டு புரியவேண்டும் என்பதேயாகும்.

எல்லாம்வல்ல இறைவன் தமிழையும், தமிழர்களையும் தளிர்க்கச் செய்வாராக!

இங்ஙனம்:

தங்கள் அன்பன்,

பண்டித கு. கண்ணையா.

தொல்காப்பியம்

ஆரிய தர்ம நூல்

தற்போது கிடைக்கப் பெறும் பழந்தமிழ் நூல்களனைத்திலும் பழமையானதும், பழங்காலத் தமிழர்களின் ஒழுக்க முறைகளைக் கொண்டிருப்பதும், பழந்தமிழுக்குச் சான்றாக விளங்குவதும் தோல்காப்பியம் எனும் செந்தமிழ் இலக்கண நூல். இது இயற்றப்பெற்ற காலத்தைக் குறித்து பல அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கின்றனர். யாம் பொதுவாக இன்றைக்குச் சுமார் 4000 அல்லது 5000 ஆண்டுகளுக்கு முற்பட்டிருக்கலாம் என்று நம்புகிறோம். ஏனெனில் ஈஜிப்ட், பாபிலோனியா முதலான தேசங்களுக்குத் தமிழர்கள் சென்று குடியேறியதாகவும், வியாபாரம் புரிந்து வந்ததாகவும் சரித்திர வாயிலாக அறிய வருகிறோம். அக்காலம் இற்றைக்குச் சுமார் 3000 அல்லது 4000 ஆண்டுகள். ஆகவே கப்பல் முதலியன ஆக்கி வெளிநாடு சென்று வியாபாரம் செய்யும் பக்குவத்தினையடைய பல நூற்றாண்டுகள் கழிந்திருக்க வேண்டும். அன்றி இதன் ஆசிரியனார், அகத்தியரின் தலைமை மாணவரென்றும், "ஐந்திரம்" என்ற வடமொழி இலக்கண நூலை நன்கு கற்றவரென்றும் நம்பப் படுவதால் அவர்களின் காலத்துடனே ஒப்பிட்டு நோக்கும்பொழுது யாம் முற்கூறிய காலவரையறையைக் கொள்ளவேண்டியிருக்கிறது.

தொல்காப்பியத்தின் ஆசிரியர் திரணதூமாக்கினி என்ற இயற் பெயர் கொண்டார். ஆரியரான அகத்தியனாரின் பன்னிருமாணவர்களுள் தலைமையார். ஜமதக்கினி என்ற ஆரிய முனிவரின் புதல்வர். ஆனால் இப் பிற்கூற்றை சிலர் பலகாரணங்கள் காட்டி மறுக்கின்றனர். ஆனால் தொல்

காப்பியத்தில் மலிந்துகிடக்கும் ஆரியர் ஒழுங்கங்களை நோக்குங்கால் இவர் ஆரிய குலத்தினைச் சேர்ந்தவர் என்பதில் ஐயமெழாது. எவ்வாற்றானும் இவர் ஆரியர்களை பகைத்தவரல்லர், மிகவும் நேசித்திருந்தவர் என்பது யாம் பின்னால் காட்டியிருக்கும் உண்மைகளிலிருந்து நனிவிளங்கும்.

தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் பிரிவுகளாய் வகுக்கப்பட்டது. எழுத்ததிகாரம் :—நூன்மரபு (சூத்திரங்கள் 33), மொழி மரபு (சூத். 49), பிறப்பியல் (சூத். 20), புணரியல் (சூத். 40) தொகை மரபு (சூத். 30), உருபியல் (சூத். 30), உயிர் மயங்கியல் (சூத். 93), புள்ளி மயங்கியல் (சூத். 110), குற்றிய லுகரப் புணரியல் (சூத். 78), எனவும்; சொல்லதிகாரம் :— கிளவியாக்கம் (சூத். 61), வேற்றுமையியல் (சூத். (22), வேற்றுமை மயங்கியல் (சூக். 34), விளிமரபு (சூத். 37), பெயரியல் (சூத். 43), வினையியல் (சூத். 51), இடையியல் (சூத். 48), உரியியல் (சூத். 100), எச்சவியல் (சூத். 67), எனவும்; பொருளதிகாரம் :—அகத்திணையியல் (சூத். 55), புறத்திணையியல் (சூத். 36), களவியல் (சூத். 50), கற்பியல் (சூத். 53), பொருளியல் (சூத். 54), மெய்ப்பாட்டியல் (சூக். 27), உவமையியல் (சூத். 37), செய்யுளியல் (சூத் 243, மரபியல் (சூத். 110), எனவும் பகுக்கப்பட்டுள்ளது. எனவே தொல்காப்பியம் என்பது 3 அதிகாரங்களையும், 27 இயல்களையும், 1611 சூத்திரங்களையும் கொண்ட ஓர் தனித் தமிழ் நூல்.

இச் சிறந்த நூலினுள் புதைந்துகிடக்கும் பண்புகளனைத்தும் தனித் தமிழரினுடையவை. ஆரியர்களின் முறைகளுக்கும் இதற்கும் மிக வேற்றுமையுண்டு என்று சில தமிழன்பர்கள் கூறுகின்றனர். இதன் உண்மையை யுணர்வான் வேண்டி யாம் ஆராய்ப் புகுந்தகாலை தொல்காப்பிய விதிகளுக்கும், ஆரிய கோட்பாடுகளுக்கும் சிறிதும் வேற்றுமைகாணப் பெறவில்லை. ஊன்றி நோக்குவோர்க்குத் தொல்காப்பியம் ஆரியக் கோட்பாடுகளைத் தமிழர்களுக்குத் தமிழில் எடுத்துக் கூறவேண்டி இயற்றப்பட்டதுபோல் காணப்படும்.

தமிழ் மொழியின் தனிச் சிறப்புக்களை உணர்த்தும் சூத்திரங்களைத் தவிர மற்றவை யனைத்தும் பெரும்பாலும் ஆரியக் கோட்பாடுகளைத் தழுவினவே. சில சூத்திரங்களோ வெனில் ஆரிய வேதங்களின் மந்திரங்களின் நேரான மொழிபெயர்ப்புப் போல் காணப்படுகின்றன. இவைகளுக்குச் சான்றாக தொல்காப்பியத்திற்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர், இளம்பூரணர், பேராசிரியர் முதலாயினோர் கூறியிருக்கும் உரைகளும் எமது கூற்றை நிலைநிறுத்துகின்றன. யாம் கூறியவாறு தனித் தமிழ்ச் சிறப்புகளைக் கூறும் சூத்திரங்களைத் தவிர மற்றவை யனைத்தும் ஆரியர்க் கோட்பாடுகளுடன் ஒத்திருக்கின்றன என்பதை இச் சிறு நூலில் விளக்கிக்காட்ட இயலாமையால் ஆங்கு மிங்குமாகச் சில உதாரணங்களை மாத்திரம் காட்டி இச் சிறு நூலை முடிக்கிறோம்.

தனித் தமிழ் நூலெனப்படும் தொல்காப்பியத்தில், ஆசிரியர் அறிந்தோ அறியாமலோ பல வடமொழி சப்தங்கள் இடம்பெற்றிருக்கின்றன. உதாரணமாக்:—தொல்காப்பியம் என்பதில் 'தொல்' என்பது தனித் தமிழும், காப்பியம் என்பது காவியம் என்ற வடமொழிப் பதத்தின் மாறுபாடுமாகும். ஏனெனில் வடமொழியின் பல வகர சப்தங்கள் தமிழில் பகரமாய் மாற்றி கையாளப்பட்டிருக்கின்றன. இனி, தொல்காப்பியத்தின் பெரும் பிரிவுகளுக்கு ஆசிரியனார் அமைத்தபெயர் "அதிகாரம்" என்ற வடமொழிப்பதம். அன்றி அவரின் உரைகளுக்கு அமைத்த பெயரும் 'சூத்திரம்' என்ற சமஸ்கிருத பதம். இனி உள்ளே கிடக்கும் வடமொழிப் பதங்களில் சிலதைக் காண்போம்.*

கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை—
(எ. சூ. 7) = மாத்ரா

உட்பெறுபுள்ளி யுருவாகும்மே—(எ. சூ. 14) = ரூப:

ஏழனுருபிற்குத் திசைப் பெயர் முன்னர்—
(எ. சூ. 201) = திஸ:

* கனத்த எழுத்தில் உள்ளவை வடமொழிப் பதங்கள்.

பனியென வருஉங் கால வேற்றுமை—(எ. சூ. 241)=கால:
வளியென வருஉம் பூதக் கிளவியும்—(எ. சூ. 242)=பூத:
மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே—(எ. சூ. 339)=மீனம்
தெய்வஞ் சுட்டிய பெயர்—(சொ. சூ. 4)=தைவ:
ஆக்கந்தானே காரண முதற்றே—(சொ. சூ. 21)=காரணம்
கரும மல்லாச் சார்பின் கிளவி—(சொ. சூ. 84)=கர்ம
ஆக்கமொடு புணர்ந்த வேதுக் கிளவி—(சொ. சூ. 92)=ஹேது
அச்சம் பயமிலி காலப் பெருமை—(சொ. சூ. 254)=பய
உவமத் தொகையே யுவமவியல—(சொ. சூ. 414)=உபம
வருணன் மேய பெருமண லுலகமும்—
(பொ. சூ. 5)=வருண: லோக:
மிக்க காமத்து மிடலொடு தொகை—(பொ. சூ. 51)=காம:
நாடக வழக்கினு முலகியல் வழக்கினு—
(பொ. சூ. 53)=நாடக
குடிமிகொண்ட மன்னு மங்கலமும்—
(பொ. சூ. 68.)=மங்கலம்
அமரர் கண் முடியு மறுவகை யானு—
(பொ. சூ. 81)=அமர:
நாமக் காலத்துண்டெனத் தோழீ (பொ. சூத். 146)=நாமம்
வானோ ரமுதம் புரியுமா லெமக்கென—(பொ.)=அமிர்தம்
பின்னுரையாக்கிய பெரும் பொருள் வதுவை—
(பொ. சூத். 172)=வதூ:
பதியிகந்து நுகர்தலு முரிய வென்ப (பொ. சூத். 191)=பதி:
வண்ணம் பசந்து புலம்புறு காலை (பொ. சூ. 202)=வர்ணம்.
தேவர்ப் பரா அய முன்னிலைக் கண்ணே—
(பொ. சூ. 450)=தேவ:
மறைமொழிதானே மந்திர மென்ப—
(பொ. சூ. 490)=மந்த்ர
வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை—
(பொ. சூ. 632)=வைஸ்ய:, வணிக:

மேலும் பல வடமொழிப் பதங்களைக் கூறலாம். இடமின்மையால் இத்துடன் நிறுத்தி தொல்காப்பியத்தின் அதிகார இயற்பிரிவுகள் எப்படி ஆரியர்களின் இலக்கணங்களைத் தழுவி யிருக்கின்றன என்பதைக் காண்போம் :—

எழுத்ததிகாரம் = வர்ண விபாக் (எழுத்துப் பிரிவு)
சொல்லதிகாரம் = ஸப்த விபாக் (சொற் பிரிவு)
பொருளதிகாரம் = காவ்ய விபாக் (ஒழுக்கப் பிரிவு)

அதிகாரப் பிரிவுகள்

எழுத்ததிகாரம்

நூன்மரபு—வர்ண விசார் (எழுத்துக்கள் வரலாறு)
மொழிமரபு—ஆதேஸ (ரூப பரிவர்த்தனம் = ஈற்றுநிலை மாறுபாடுகள்)
பிறப்பியல்—உச்சாரண ஸ்தான் (உச்சரிக்கப்படுமிடங்கள்)
புணரியல்—சந்தி விசார் (புணர்ச்சி விதி)
தொகைமரபு—க்ருத், உணாதி, ஸ்வட் ப்ரத்யயாந்தா. (தோன்றல் திரிதல் கெடுதலாதி விகாரங்கள்)
உருபியல்—ப்ரத்யய விவரண் (உருபுகளின் விளக்கம்)
உயிர் மயங்கியல்—ஸ்வரலோப : (உயிர் மயக்கம்)
புள்ளி மயங்கியல்—வ்யஞ்ஜனலோப : (மெய் மயக்கம்)
குற்றியலுகரப் புணரியல்—தமிழ்மொழிக்கே உரித்தானது.

சொல்லதிகாரம்

கிளவியாக்கம்—ஸப்த ஸாதன (சொற்கள் வகுப்பு)
வேற்றுமை இயல்—விபக்தி ப்ரகரண (வேற்றுமை இயல்)
வேற்றுமை மயங்கியல்—விபக்தி ரூபாந்தர (வேற்றுமை மயக்கம்)
விளிமரபு—ஸம்போதன (விளி)
பெயரியல்—ஸஞ்ஜா விதான் (பெயரியல்)
வினையியல்—க்ரியா (வினை)
இடையியல்—அவ்யய (இடைச்சொல்)
உரியியல்—க்ரியா விசேஷண (உரிச்சொல்)
எச்சவியல்—(முதல் எட்டு இயல்களின் பொது விளக்கம்)

பொருளதிகாரம்

அகத்திணை இயல்—தம்பதி ப்ரேம (காதலர் இன்பம்)

புறத்திணை இயல்—தர்ம லக்ஷணம் (புறப்பொருள் விதிகள்)
களவியல்—காந்தர்வ விதி (களவுமுறை)
கற்பியல்—வைதவ விதி (கற்புமுறை)
பொருளியல்—முன்னுன்கு இயல்களின் பொதுமை
மெய்ப்பாட்டியல்—ரஸாஹஸ்ய (வெளிப் பொருட்டோற்றம்)
உவமை இயல்—உபமா விவரண் (உவமை இயல்)
செய்யுளியல்—சந்தஸ் (செய்யுள்)
மரபியல்—தமிழுக்கே உரித்தானது

இனி, தொல்காப்பியத்தில் தமிழ் மொழிக்கெனவும், தமிழர்களின் கலை, ஒழுக்கங்களுக்கெனவும் கூறப்பட்டுள்ள விதிகள் பெரும்பாலும் வடமொழியையும், ஆரியர்கள் கலை, ஒழுக்கங்களையும் தழுவியவையே என்பதைக் காண்போம்:—

எழுத்ததிகாரம் :—

அகர இகர மைகாரமாகும் (54) = வ்ருத்திராதைச் (பாணிணி)
அ, ஆ முன் இ, ஈ வர ஐ யாகும்
அகர உகர மௌகாரமாகும் (55) = வ்ருத்திராதைச் (பாணிணி)
அ, ஆ முன் உ, ஊ வர ஔ ஆகும்
ககார ஙகார முதனு வண்ணம் (89) = அகுஹவிஸர்ஜ்ஜனீ
யாஞம் கண்ட: அ, ஆ. க...ங கண்டத்திலாகும்
சகார ஞகார மிடைநா வண்ணம் (90) = இசுயஸாஞம்
தாலு இ, ஈ, ச...ஞ மத்திய வண்ணத்திலாகும்
டகார ணகார நுனிநா வண்ணம் (91) = ருடுரவாஞம்
மூர்த்தா; ரு, ரூ, ட...ண, ர, ஷ மூர்த்தாவாகும்
இதழியைந்து பிறக்கும் பகார மகாரம் (97) = உபூபத்மானீ
யமாஞ மௌஷ்டௌ; உ, ஊ, ப...ம உதடுகளாலாகும்
பல்லிதழியைய வகரம் பிறக்கும் (98) = வகாரஸ்ய தந்
தௌஷ்டம்; வகரம் பல்லிதழியையப் பிறக்கும்
எல்லா யெழுத்து...யளபிற்கோட லந்தணர் மறைத்தே (102)

இச்சூத்திரத்திற்கு நேரான ஒப்புமை காட்டத் தேவையில்லை. ஏனெனில் இதற்கு உரையாசிரியர் வரைவதைக் காணுங்கள் :—அந்தணர் மறைத்தே-பார்ப்பாரது வேதத்தே யுளதே.

உயிரீறு சொன்மு னுயிர் வரு வழியு
உயிரீறு சொன்மு மெய்வரு வழியு
மெய்யீறு சொன்மு மெய்வரு வழியுமென்
றுயீ ரியல புணர்நிலைச் சுட்டே (எ. 107)

ஸ்வரசந்தி—உயிர்முன்னுயிர்; வ்யஞ்ஜனசந்தி—மெய்முன்னுயிர் அல்லது மெய்.

எழுத்ததிகாரத்தினின்று சில உதாரணஒப்புகளைக் காட்டினோம். இனி சொல்லதிகாரத்தினின்றும் சில உதாரணங்களைக் காட்டுவோம்: —

ஆக்கந்தானே காரண முதற்றே (சொ. 21)

நாபாவே வித்யதே பாவ:...காரணமில்லாமல் காரியமாகாது

வேற்றுமை தாமே யேழென மொழிப
விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே (72, 73)

ஸுபந்தம் பதம்—7 வேற்றுமைகளை உடையது பதம். × விபக்தய: அஷ்டதய: - வேற்றுமைகள் 8 வகை.

இறப்பி நிகழ்வி னெதிரினென்று வம்மூக்காலமும் (200)

பூத, வர்த்தமான, பவிஷ்ய (இறந்த, நிகழ், எதிர்)

வேற்றுமைத் தொகையே யுவமைத் தொகையே
வினையின் றொகையே பண்பின் றொகையே
யும்மைத் தொகையே யன்மொழித் தொகையென
றவ்வாறென்ப தொகைமொழி நிலையே (412)

வேற்றுமைத் தொகை—தத்புருஷ ஸமாசம் (ஈஸ்வரேண தத்த: - ஈஸ்வரதத்த:)

யுவமைத்தொகை—உபமான ஸமாசம் (கனேன சத்ருஷம் ஸ்யாம: - கனஸ்யாம:)

வினைத்தொகை—அவ்யயீபாவ சமாசம் (ராமஸ்ய சமீபேன கார்யமிதி - உபாராமம்)

பண்புத்தொகை—கர்மதாரய சமாஸம் (பீதவர்ண அம்பரம் - பீதாம்பரம்)

உம்மைத்தொகை—த்வந்த்வ சமாசம் (ராம: கிருஷ்ண: - ராமகிருஷ்ணௌ)

அன்மொழித்தொகை—பஹுவ்ரீஹீ சமாசம் (ய: சந்த்ரம் ஸத்ருஷம் மௌலிம் தாரய: ஸ: - சந்த்ரமௌலி:)

எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமும் மொழி இலக்கணத்தைக் கூறுவனவாகையால் இவைகளில் நாம் அதிக கவனம் செலுத்தவேண்டியதில்லை. தமிழர்களின் நாகரீகத்தைக் கூறுவது பொருளதிகாரமாகையால் அதைச் சிறிது அதிக விளக்கமாக ஆராய்வோம்.

உயர்ந்தோர்க்குரிய வோத்தினான் (பொ. 31)

இதற்கு உரையாசிரியர் கூறும் பொருளைக் காணுங்கள்:— வோத்தின் ஆன-வேதத்தினாற் பிறந்த வடநூல்களும் தமிழ் நூல்களும்; உயர்ந்தோர்க்கு உரிய-அந்தணர், அரசர், வணிகர்க்கும், உயர்ந்த வேளாளர்க்கும் உரிய. மேலும் பாருங்கள்:- வேதந்தோன்றிய பின்னர் அது கூறிய பொருள்களை இவையும் ஆராய்தலின் வோத்தினான என்று அவற்றிற்குப் பெயர் கூறினார், ஓத் என்பது வேதத்தையே யாதலின்.

தொல்காப்பியம், தமிழ்நூல்களனைத்தும் வேதத்தை கூறுவதாக உரையாசிரியர் வெகுத் தெளிவாகக் கூறுகின்றார். என்றால், தமிழர்களின் கலைகள் தனிப்பட்டவை யெனத் தொல்காப்பியத்தைத் தங்கள் கலை நூலாகக் கூறும் தமிழர்கள் எப்படிக் கூறலாம்.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமு
மைவகை மரபி னரசர் பக்கமு
மிருமூன்று மரபி னேனோர் பக்கமு
மறுவில் செய்தி மூவகைக் காலமு
நெறியி னாற்றிய வறிவன் றேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணு
மனைநிலை வகையோ டாங்கெழு வகையிற்
றோன்றநிலை பெற்ற தென்மனார் புலவர் (போ. சூ. 75)

அன்புமிக்கத் தமிழ்ச் சகோதரர்களே! இச் சூத்திரத்திற்கு உரையாசிரியர் அளிக்கும் பொருளைச் சிறிது பொது நோக்குடனே ஆராய்ச்சித் தன்மையுடனே காண்பீர்களாக.

அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்—ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் என ஆறு கூற்றினுட்பட்ட பார்ப்பியற் கூறும். இதனைக் கீழ் வரும் வடமொழி மந்திரத்துடனே ஒப்பிட்டுப் பாருங்கள்:—

அத்யயனம் அத்யாபனம் யஜனம் யாஜனம் ததா
தானம் ப்ரதிக்ருஹச் சைவ ப்ராஹ்மணானும் அகல்பயத்.

(இதன் பொருள்) ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கொடுத்தல், கோடல் என்ற ஆறும் ப்ராஹ்மணர்களுக்கு உரிய தொழில்கள்.

அன்பர்களே! இரண்டும் ஒரே நேர்மொழி பெயர்ப்புப் போல் காணப்படவில்லையா? இவ் உண்மையை உணர்ந்தும் ஏனோ ஆரியர்கள் கலைவேறு தமிழர்கள் கலைவேறு என்று வஞ்சகம் பேசுகின்றீர்? இத்துடனேயோ, இவ் உரையாசிரியர் உங்களுக்கு ஆரியர்களின் கலைகளை எவ்வளவு அழகாய் விளக்கிக் கூறுகின்றார் என்பதைப் பாருங்கள். மேலும் அவர் கூறுவதாவது:—இருக்கும், யஜுரும், சாமமும், தலையாய ஓத்து; இவை வேள்வி முதலியவற்றை விதித்தலின் இலக்கணமுமாய், வியாகரணத்தான் ஆராயப்படுதலின் இலக்கியமுமாயின. அதர்வமும் ஆறங்கமும் தர்ம நூலும் இடையாய ஓத்து; ஆறங்கமாவன: உலகியற் சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடனாராயும் ஐந்திரத் தொடக்கத்து வியாகரணமும், போதாயனீயம் பாரத்துவாசம் ஆபத்தம்பம் ஆத்திரையம் முதலிய கற்பங்களும், நாராயணீயம் வாராகம் முதலிய கணிதங்களும், எழுத்தாராய்ச்சியாகிய பிரமமும், செய்யுளிலக்கணமாகிய சாந்தமுமாம்.

தரும நூலாவன, உலகியல் பற்றிவரும் மனு முதலிய பதினெட்டும்.

இதற்கு மேற்கோளாகக் காட்டியிருக்கும் செய்யுளை நோக்குக:—

ஓதல் வேட்டலவை பிறர்ச் செய்த
லீத லேற்றலென்றறு புரிந்தொழுகு
மறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி.

அன்பர்களே! இனியுங்கூடவா தமிழர் கலைவேறு ஆரியர் கலைவேறு என்று சொல்லப் போகிறீர்கள்? உண்மை அனைவர்க்கும் ஒன்றாயில்லாமல் எப்படிப் போகும்? இனி அடுத்த உரையைக் காண்போம்.

ஐவகை மரபின் அரசர் பக்கமும்—ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ் செய்தல் என்னும் ஐவகை இலக்கணத்தை யுடைய அரசியர்க் கூறும்.

ஒப்புமை :—

ப்ரஜாநாம் ரக்ஷணம் தானமிஜ்யாத்யயன மேவச
விஷயேஸ்வ ப்ரஸக்திஸ்ச க்ஷத்ரியஸ்ய ஸமாஸத:

(இ-ள்) குடிகளைக் காப்பாற்றல், ஈதல், வேட்டல், ஓதல், பொருள்களிற் பற்றின்மை ஆகியன க்ஷத்திரியர்களின் காரியங்கள்.

எவ்வளவு அழகான பொருத்தம்!

இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்—ஓதலும், வேட்டலும், ஈதலும், நிரையோம்பலும், வாணிகமுமாகிய அறுவகை இலக்கணத்தையுடைய வாணிகர் பக்கமும்.

இதற்கு நேர் ஆரியக் கலையைக் காணுங்கள் :—

பஸூநாம் ரக்ஷணம் தான மிஜ்யாத்யயன மேவச
வாணிஜ்யம் க்ருஷீதஞ்ச வைஸ்யஸ்ய ஸ்வபாவஜம்.

(இ-ள்) நிரைகாத்தல், ஈதல், ஓதல், வேட்டல், வாணிகம், உழவு ஆகிய ஆறும் வைஸ்யர்களின் தொழில்கள்.

அன்பர்களே! ஆரியர்களுக்கே உரித்தான தென்று சொல்லப்படும் இவ்வர்ண பேதங்கள் தமிழ்நாட்டின் தனிப் பெரும் நூலாம் தொல்காப்பியத்தில் ஏன் இடம்பெற்றன? இதிலிருந்து தமிழர்களும் அக்காலத்தில் ஆரியர்களிடமிருந்து பல கொள்கைகளை ஏற்றுத் தங்களுடனே சேர்த்துக் கொண்டார்களென்றோ, அல்லது அறிந்தோ அறியாமலோ தமிழர்கள் கொள்கையும், ஆரியர்கள் கொள்கையும் ஒத்திருக்கின்றது என்பது நன்குப் புலனாகவில்லையா? பின் ஏனோ "ஆரிய திராவிடக்" கூச்சல்.

அடுத்தபடி :—

நாலிருவழக்கிற்றாபதப் பக்கமும்—ஊண்ணசையின்மை, நீர்ணசையின்மை, வெப்பம் பொறுத்தல், தட்பம் பொறுத்தல், இடம்வரை யறுத்தல், ஆசனம்வரை யறுத்தல், இடையிட்டு மொழிதல், வாய்வாளாமை என்ற எட்டும் ஆகமத்தின் வழி நின்று வீடுபெற முயல்வார்க்கு உரியவாகிய எண்வகை தவம் புரியும் கூறும்.

இதற்கு நேரான ஆரியர்கள் தவத்தின் லக்ஷணங்களைப் பாருங்கள்:—

க்ஷுத்பிபாஸா நிவ்ருத்தி :—ஊண், நீர்னசையின்மை
ஶீதோஷ்ண ஸ்ஸஹனம்—வெட்பம், தட்பம் பொருத்தல்.
ஸ்தான பேத சமனம்—இடம்வரை யறுத்தல்.
ஸுகஸ்த்திரம் ஆஸசனம்—ஆசனம் வரையறுத்தல்.
பாஷண வர்ஜனம் — இடையிட்டு மொழிதல்.
அந்ருத த்யாகம்—வாய்வாளாமை.

தவத்தின் பயன்களைத் தமிழர்களுக்கு ஆரியர் எவ்வளவு விளக்கமாக எடுத்துக் கூறுகின்றார்!

நகையே யழுகை யிளிவரன் மருட்கை
யச்சம் பெருமிதம் வெகுளி யுவகை யென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப (பொ. சூத். 251)

உரை :—நகைமுதல் உவகை வரை எட்டும் மெய்ப்பாடாகும். ஒப்புமை :—நகை = ஹாஸ்ய, அழுகை = கருண, இளிவரல் = பீபத்ஸ, மருட்கை = அத்புத, அச்சம் = பயாநக, பெருமிதம் = வீர, வெகுளி = ரௌத்ர, உவகை = ஸ்ருங்கார.

பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளுங்
கண்ணிய புறனே நானான் கென்ப...(பொ. சூத். 249)

உரை :—ஒன்பது சுவையில் (நவ ரசம்) உருத்திரம் ஒழிய மீதி எட்டு ரஸங்களும் அதை நுகரும் பொறியுணர்வும், அது பட்டபோது உள்ளத்து நிகழும் குறிப்பும், அதனலேற்படும் அசைவும் கூடி 36 ஆகும்.

ஒப்புமை:—பொறியுணர்வு-ஸ்தாயீபாவ :; உள்ளக் குறிப்பு-விபாவ :; அசைவு-அநுபாவ ; விறல்-சஞ்சாரீ பாவ :;

வினை பயன் மெய்யுரு வென்றனன்கே
வகைபெறவந்த உவமத்தோற்றம். (பொ. சூத். 276)

உரை :—வினை, பயன், மெய், உருவம் என உவமங்கள் நான்கு.

ஒப்புமை :—க்ரியோயமா = வினையுபமம் (உ-ம்) புலி யன்ன மரவன்.

பலோபமா — பயனுவமை. (உ-ம்) மாரியன்ன வண்கை.
ஸ்தூலோபமா—மெய்யுவமம் (உ-ம்) துடியிடை.
ரூபோபமா—உருவ உவமை. (உ-ம்) பொன்மேனி.

குறிலே நெடிலே குறி லிணைக் குறிநெடி
லொற்றோடு வருதலோடு மெய்ப்படநாடி
நேரு நிறையுமென்றி சிற்பெயரே. (பொ. சூத். 315)

ஒப்புமை :—சானுஸ்வாரஸ்ய தீர்க்கஸ்ய விசர்க்கீச குருர்பவேத் = மெய்யுடன் கூடிய அல்லது கூடாத குறில் நெடில் அசையாகும்.

நூலே கரகமுக்கோல் மணையே
யாயும் காலையந்தணர்க் குறிய (பொ. சூத். 625)

உரை :—முன்னூலும், குண்டிகையும், முக்கோலும், யாமைமணையும் போல்வன அந்தணர்க்கு உரிய என்றவாறு.

தமிழர்களே! தொல்காப்பியத்தில் குறிக்கப்படும் இவ் வந்தணர்கள் தமிழர்களா, ஆரியர்களா? தமிழர்களாயின், அக்காலத்தில் தமிழர்களில் சிலர் அந்தணர்கள் என்று அழைக்கப்பட்டு பூணூலும், சிகையும் வைத்துக்கொண் டிருந்ததாக ஏற்படுகின்றதே! ஆரியர்களாயின், தமிழர்க ளின் தனிக்கலையைக் கூறவந்த தொல்காப்பியத்தில் ஏன் இடம்பெற வேண்டும்? தொல்காப்பியனார் ஆரியர் என்கிறீர் களா? என்றால் அவரால் இயற்றப்பட்ட நூலிற் கிடக்கும் விடயங்கள் தமிழருடையவை என்று எப்படிக் கூறுவீர்கள்? போகட்டும், இனி தொல்காப்பியத்தில் கூறப்படும் தமிழர் களின் மணமுறையை நோக்குவோம்.

மறையோர் தேயத்து மன்ற லெட்டனுள் (பொ. சூத். 92)

உரை :—வேத மோரிடத்திற் கூறிய மணமெட்டனுள் களவொழுக்கம் பொதுவாகலின் நான்கு வருணத்தாருக்கும் ஆயர் முதலியோருக்கும் உரித்து. இராக்கதம் அந்தண ரொழிந்தோர்க்கு உரித்து.

தமிழரின் மணவொழுக்கம் கூறப்போந்த தொல் காப்பியம் தனக்கு ஆதாரமாக வேதத்தையன்றோ கூறு கின்றது. தமிழர்களின் இருவகை மணமுறைகளில் ஒன் ருன களவு மணம் நான்கு வருணத்தார்க்கும் உரித்து என் கின்றதே, எந்த நான்கு வருணத்தார்க்கு? ஆரிய வருணத் தார்க்கா, அல்லது தமிழர்களுக்குள்ளும் நான்கு வருணப் பிரிவுகள் இருந்தனவா? போகட்டும், இனி அடுத்த மண முறையாம் கற்புமணம் யாருடையதென்று பார்ப்போம்.

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே
(பொ. சூத். 142)

உரை :—கரணமொடு புணர—வேள்விச் சடங்கோடேகூட.

தமிழர்கள் வேள்வியும் செய்திருந்தனரோ? என்றால் தமிழரின் தனிவேள்வி முறைகள் எங்காயினும் கூறப்பட் டுளவா? வேள்வி என்ற தமிழ்ப்பதம் 'யக்ஞம்' என்ற ஆரிய மொழிப்பதத்தின் பொருளைக் கொண்டதல்லவா? ஆகவே இக் கற்புமணம் என்பது ஆரியர்களின் தைவமணம் அல்லவா? இதைப் பின்வரும் சூத்திரத்திற்கு உரையின் வாயிலாக உரையாசிரியரும் நிலைநாட்டுகின்றார் :—

மேலோர் மூவர்க்கும் புணர்ந்தகரணம்
கீழோர்க்காகிய காலமுமுண்டே (பொ. சூத். 144)

உரை :—வேதநூல்தான் அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம் வேளாண் மாந்தர்க்கும் தந்திர மந்திர வகையான் உரித்தான காலமு முண்டு.

ஆகவே இப்பொழுது நன்கு புலப்பட்டு விட்டது. தனித் தமிழர்கள் என்று சொல்லப்படும் வேளாண் மாந்தர்

களின் மணமுறையும் ஆரியர்களின் மணமுறையே. ஆகவே தமிழர்களின் இருவகை மண முறைகளும் ஆரியர்களி னுடையவே என்று பெறப்படுகின்றது.

இவ்விடத்தில் யாம் ஒன்றை வற்புறுத்த விரும்புகின் றோம். இம்மாதிரி ஒப்புக்காட்டுகளாலும், வற்புறுத்தல்களா லும் தமிழையோ, தமிழர்களையோ, தமிழர்களின் கலை, ஒழுக் கங்களையோ இழிவு படுத்த வேண்டும், குறைகூற வேண்டும் என்பது இம்மியளவு கூட எமது நோக்கமில்லை என்பதை யாம் ஆண்டவன் பேரில் ஆணையிட்டுக் கூறுகிறோம். ஆராய்ச்சியின் ஆவல் கொண்டு யாம் இறங்கிய துறையில் எமக்குக் கிடைத்த உண்மைகளை அப்படியே எடுத்துக் காட்டவேண்டும், அன்றி சில வேடதாரிகள் பாமர ஏழைத் தமிழ் மக்களிடம் ஆராய்ச்சிக் கெதிரான ஆரியக் திராவிடச் சண்டையைக் கிளப்பிவிட்டு அதன் வாயிலாய்த் தங்கள் அற்ப சுயநல சுகத்தைப் பயன் படுத்திக்கொள்ள முயற்சிப்ப தைத் தடுக்க வேண்டும் என்பதே எமது பேரவா. உண் மையை உள்ளவாறு ஒப்புக்கொள்ளத் தமிழர்கள் ஏன் தயங்க வேண்டும்? அங்கிலை, தமிழர் சமுகத்திற்கே பெரும் இடை யூறை விளைவிக்கலாம். அந்நாளிற் களைகோலுதற்காகவே யாம் இக்காரியத்தில் இறங்கத் துணிந்தோம்.

வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலித
லாக்கஞ்செப்ப னாணுவரை யிறத்த
னோக்குவ வெல்லா மவையே போறன்
மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்
சிறப்புடை மரபினவை களவென மொழிப. (பொ. 100)

ஒருதலை வேட்கை-அனுராக (புணர்ச்சியின் முன்னும் பின்னும ஒருதன்மைத்தாய் நிலைபெறும் வேட்கை); ஒரு தலை உள்ளுதல்-விஹ்வலா (சிந்தியாநிற்றல்); மெலிதல்- விதக்தா (வாடுதல்); ஆக்கஞ்செப்பல்-உத்கண்டிதா (இடை யூறை ஆக்கமாகக் கொள்ளல்); நாணுவரை யிறத்தல்-விலஜ் ஜிதா (வெட்கமுற்றுத்தேரல்); நோக்குவ வெல்லாம் அவையே போறல்-தன்மயதா (அனைத்தையும் மனத்தில் உள்ளவாறு காணல்); மறத்தல்-விவஸதா (மறந்து போதல்;)

மயக்கம்-ப்ராந்திமதா (மயங்கல்); சாக்காடு-ம்ரியதா (இறக்கத் துணிதல்). இவைகள் தாம் தமிழ் நாட்டுக் காதலர்களின் தனிக்களியாட்டங்களாம். ஆனால் வடமொழிக் காவியங்கள் அனைத்திலும் இவ்விளக்கங்களை யாம் வெகுவாகக் காணப்பெறுகிறோம். என்வே யாம் மறுபடியும் வற்புறுத்த விரும்புகிறோம், வேண்டாம் நமது அருந்தமிழ் நாட்டில் அர்த்தமற்ற ஆரியத் திராவிடக் கிளர்ச்சி.

மேலும் பரந்து ஆராய இந்நூலின் இடக்குறுக்கம் எமக்குத் தடையாகின்றது. இச்சிறு ஒப்புமையிலிருந்தே பொது நோக்குடையயாரும் யாம் கூறப்புகுந்த உண்மை சரியென்பதை நன்குணரலாகும். யார் யாரிடமிருந்து இக்கொள்கைகளை பரிமாறிக்கொண்டனர் என்பது வேறு ஆராய்ச்சிக்கு உரித்தானது. யார் யாரிடமிருந்து கற்றுக்கொண்டிருந்த போதிலும் 5000, 6000 ஆண்டுகளாக இரு பெரும் சமூகத்தினரும் மொழியின் மாறுபாடு தவிர ஒரே விதக் கொள்கைகளையே வாழ்க்கையிற் கொண்டிருந்தனர். எனவே இப்பொழுது உலகமெலாம் ஒற்றுமை, ஒற்றுமை யென்று துடித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் ஏனோ திராவிடர்கள் அதற்கு மாறுபாடாக வேற்றுமையைக் கிளப்பவேண்டும். மத்திய காலத்தில் "ஆரியர்" என்று பெயர் சூட்டிக்கொண்ட யாரோ சில சுயநலக்காரர்கள் திராவிடர்களுக்குப் பெறும் தீங்கை விளைவித்து விட்டனர்களாம், அதன் வஞ்சங்கொண்டு இப்போது இப்பிரிவினையை கற்பிக்கின்றார்களாம். அந்தோ! என்னருமை உடன் பிறந்தார்களே! கால மாறுபாட்டை நீங்கள் உணர வில்லையா? பத்துப்பேராயினும் இப்போது தங்களை தனித்த ஆரியரெனவோ, திராவிடரெனவோ கூறமுடியுமா? அரசியலில், சமூக வழ்க்கையில், மற்றும் எல்லாத் துறைகளிலும் மிகப்பெறும் மாறுதல்கள் நடந்துவிட்டன. பழைய உலகத்திற்கும், புதிய உலகத்திற்கும் முன்னதிலிருந்து பின்னது தோன்றியிருப்பினும் தற்போது சிறிதும் சம்பந்தமில்லை. ஆகவே பழைய சம்பவங்களை இக்காலத்துடனே ஒப்பிடுவது சிறிதும் பொருத்தமில்லை. தற்கால நிலையிலிருந்து தமிழை, தமிழர்களின் நாகரீகங்களை முன்னேற்ற ஆக்க

வேலைகள் புரிந்தால் அதுதான் தமிழர்களுக்கு நன்மை பயக்க முடியும். அழிவைவிடுத்து ஆக்கத்துறையில் அனைவரும் ஒன்று சேர்வோமாக.

தமிழ் முந்தியதா, வடமொழி முந்தியதா, தமிழர்களிடமிருந்து ஆரியர்கள் கலை, ஒழுக்கங்களைக் கற்றுக் கொண்டனரா ஆரியர்களிடமிருந்து தமிழர்கள் கற்றுக்கொண்டனரா, இந்தியாவின் பூர்வீகக் குடிகள் திராவிடர்களா, ஆரியர்களா என்ற ஆராய்ச்சிகளைக் கொண்டு யாம் இச் சிறு நூலை இயற்றவில்லை. யார், யாரிடமிருந்து கற்றுக்கொண்டிருந்த போதிலும் சரியே, இருவர்களின் கோட்பாடுகளும் ஒத்திருக்கின்றன. ஆகவே இப்பொழுது திராவிடர்கள் கலை வேறு, ஆரியர்கள் கலைவேறு என்று சொல்லவேண்டியதில்லை என்பதே எமது நோக்கம்.

ஆதி மனிதத் தோற்றத்தைக் குறித்தும், ஆரிய திராவிட சமூகங்கள் ஏற்பட்டதைக் குறித்தும், இவ்விருவர்களின் சண்டைகள் கலப்புகளைக் குறித்தும், ஆரியம் தமிழ் மொழிகளின் தோற்றத்தைக் குறித்தும், அவைகளின் ஒன்றுக்கொன்றுள்ள உறவைக் குறித்தும் பின்னால் இகை போன்ற பல சிறு நூல்களின் வாயிலாக வெளியிட்டு வருவோம்.

எமது இவ்வெல்லா முயர்ச்சிகளின் நோக்கமும் உலகில் இன்று நிலவிக்கிடக்கும் எல்லாத் துறைகளினும் அமைதியின்மையை யகற்றி, அமைதியை நிலையுறுத்தி, தமிழ் மொழியை நன்கு செழிக்கச் செய்து, அதன் அருமை பெருமைகளை உலகினர் அறிந்துகொள்ளும்படிச் செய்து தமிழர்களை மறுபடியும் உலகையாளும் உன்னத நிலையில் காணவேண்டும் என்ற பேரவாவே.

எல்லா விடயங்களிலும் ஒப்பாயிருக்கும் **தொல்காப்பியம் ஆரிய தர்ம நூல்** என்பதில் என்ன ஐயம்?

PRINTED AT THE SETHURAM PRESS, 12, ANDERSON STREET, G.T., MADRAS.